# நாவலர் வ.இரா. நெடுஞ்செழியன்



நெடியதோர் உயரம் தானோ நெடுஞ்செழியன் என்றே,
நெடிதுநாள் மனத்தில் யானும்  நினைத்த துண்டு!
முடியதாய்ச் சொற்சிலம்பம் முன்நின்று பேச்சில்வரும்!
பிடியதாய்த் தமிழும் நெஞ்சில் பிறந்தே வழிந்துஎழும்!

அடியதாய்ச் சொற்கள் தாமும் அழகாய்த் தொடர்ந்து விட,
அலையென அவையும் தானே அழகுடன் ஏறி இறங்கும்!
கலையாக இடையிடையேக் கதைகளைச் சொல்வதுண்டு!
கலையாத மக்கள் கூட்டம் கனிவுடன் கேட்குமன்றோ!

கனலான சொற்கள் கூட கனமின்றிப் பிறக்கும்தானே!
மனதிலே தமிழனென்று மார்தட்டிச் சொல்லும் வகையில்,
தினம்கொள்ளும் அலுவல் பணியில் செந்தமிழில் உரையாட,
மணமான தமிழுமங்கே கொப்பளிக்கும் நாளும் பேச்சில்!

தனியனாய் யானும் சிலமுறைச் சந்தித்துப் பேசியதுண்டு!
அணியாகப் பூக்கும் முறுவல், அடுத்துவரும் தமிழ்ப் பொழிலே!
இனியதாய், இலக்கணம்சீர் தமிழேக் குழைந்து வருமங்கு!
கனிவுடைச் சொல்லா யதிலும், மரியாதைத் தானிருக்கும்!

நல்லதோர்ப் பிள்ளையென்றே கண்ணதாசன் தாய்ச்சொல்ல,
சொல்லால் கழகத்தைச் சுவையோடு வளர்த்தார் என்றே,
பல்லிடங்கள் அண்ணாவும் மேடையில் சொல்வதுண்டாம்!
சொல்லாத தமிழையுமோர்ச் சுவையான தமிழாக்கும் வித்தகன்!

மல்லைச் சிற்பம் போல் மருவிலாப் பெருமை கொண்டு,
நல்லசீர் வடக்காலத்தூர் மண்ணகத்தோன் நாவலரானார்!
எல்லையில் குறளுக்கும் உரைகண்டார் நல்ஆய்வுடனே!
நல்லறமாய்த் தமிழ்வாழும் நாள் வரையில் பேர் சொல்லும்!

சொல்லேர் உழவராக, வாழ்ந்திட்டார் வேளாண்குடி பிறந்து!
முள்ளாக சிலநெருடல் அரசியல் பயணத்தில் கண்டாலும்,
தள்ளாத கொள்கையுடன் தமிழோடுதான் வாழ்ந்திருந்தார்!
மெல்லியலாள் மருத்துவரைக் மணம் கொண்டு வாழ்வமைய,

இல்லறமும் நல்லறமாய் இனியனாம் மதிவாணன் மகனாக,
எல்லையில் பெருமையுடன் நாவலர்க்கு  நூற்றாண்டு!
மெல்லியதாய் மனம் சூழும் அன்பைக் கொண்டு,
நல்லற மனிதருக்கு யான் பகின்ற வாழ்த்திதுவே!

நாள்: 11-07-2020 — கவிஞர் கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்